முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 05.08.2026

O.S. No. 153/2023

பிவா.சா-1-கதிரவன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. 1ம் பிரதிவாதி லிங்கபாண்டியனும், எனது தாயாரும் சட்டப்பூர்வமாக திருமணம் செய்தார்கள் என்பதற்கு ஏதேனும் ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

2. இந்த வழக்கில் வாதியும், 1 ம் பிரதிவாதியும் இந்து திருமண முறைப்படி 12.11.1982 ல் சட்டப்பூர்வமாக திருமணம் செய்தார்கள் என்றால் சரிதான். பிவாாசஆ 1 செட்டில் மென்ட் ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்திருக்கிறேன். பிவாசாஆ 1 ஆவணத்தில் என்னை இளவராக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 09.09.2022 தேதிய செட்டில் மென்ட் ஆவணப்படி நான் ஒரு இளவர் என்பதால் வேதமாணிக்கம் மகள் தங்கபாய் எனது காப்பாளராக கண்டு செட்டில்மென்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. பிவாசாஆ 1 ஆவணம் 15 வது பக்கத்தில் சௌந்திரபாண்டியன் பெயரில் உள்ள அசல் ஆவணம் தொலைந்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. வாதியும், 1ம் பிரதிவாதியும் வழக்கு பட்டிகை சொத்தில் ஜனவரி மாதம் 1995 முதல் ஒன்றாக குடியிருந்து வந்தார்கள் என்றால் தெரியவில்லை. மேற்படி வழக்கு

சொத்தானது 1 ம் பிரதிவாதியால் கடந்த 24.11.1991 ல் ஆவணஎண்.2750 மூலம் கிரயம் பெறப்பட் சொத்து என்றால் சரிதான்.

4. மேற்படி 1ம் பிரதிவாதிக்கு 2003 ம் ஆண்டுக்கு பிறகு வாதியின் உடனான திருமண உறவு இருந்தபோதும் தங்கபாய் என்ற நபருடன் 1ம் பிரதிவாதி வாழ்ந்து வந்தார் என்றாலும் அதை தட்டி கேட்ட வாதியை விட்டுவிட்டு 2003 ம் ஆண்டிலிருந்து 1ம் பிரதிவாதி தங்கபாய் உடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். 2003 முதல் 1ம் பிரதிவாதி அவரது மனைவியான வாதிக்கு எந்தவொரு வாழ்க்கை பொருளதவி தராமல் அவரை தனியாக விட்டுவிட்டு வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல.

5. மேற்படி பிவாசாஆ 1 ஆவணத்தில் பக்கம் 3 ல் மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்து கைவசம் எடுத்து அனுபவித்து வர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 2 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் விலாசம் 17/127 புவியூர் காலணி, தென்தாமரைகுளம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பிவாசாஆ 1 ஆவணத்திலும் கண்டுள்ள அதை எழுதி தந்த மற்றும் எழுதி வாங்கியவர் முகவரி புவியூர் காலணி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட விவரத்திலிருந்து வழக்கு சொத்தை அதை எழுதி தந்த தேதியிலிருந்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இல்லை என்பது புலனாகிறது என்றால் சரியல்ல.

6. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகும், நானும் 1ம் பிரதிவாதியும் 15.09.2023 ம் தேதியன்று வாதியை வழக்கு சொத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்ற முயற்சி செய்ததால் வாத மேற்படி 15.09.2023 தேதியன்று என் மீது இணையதளம் மூலம் RRS 23175572 என்ற புகார் கொடுத்திருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி புகார் தென்தாமரைகுளம் காவல் நிலையத்தாரால் புகார் ஏற்பு மனு 484/2023 படி மேற்படி

புகார் விசாரணைக்கு எடுத்து கொள்ளபட்ட போது மேற்படி வழக்கு நிலுவையில் இருப்பதால் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நடந்து கொள்வதாக அந்த புகார் முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

7. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் 1ம் பிரதிவாதியின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். அதிலும் 1ம் பிரதிவாதியின் முகவரி 17/127, புவியூர் காலணி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இறப்பு சான்றிதழ் ஆவணம் வாசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் இதுவரை வாதியை வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து வெளியேற்ற கோரி ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் தென்தாமரைகுளம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை எண்.106/2023 என்ற வழக்கு என் மீதும், எனது பெற்றோர் மீதும் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 294(பி) மற்றும் 447,427, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது தான் மேற்கண்ட முதல் தகவல் அறிக்கை நகல் என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையின் நகல் வாசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. மேற்படி வழக்கில் நானும், 1ம் பிரதிவாதியும் 04.09.2023 மற்றும் 10.09.2023 தேதி அன்று வாதியை பட்டிகை சொத்தில் இருந்து சட்டத்திற்க புறம்பாக வெளியேற்ற முயற்சித்தோம் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் நாங்கள் சட்டதிற்கு புறம்பாக வெளியேற்ற முயற்சித்ததால் தான் வாதி சட்டதிற்கு புறம்பாக வெளியேற்ற கூடாது என்று பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது முதன்மை வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி வருமானங்களை வாதி வாங்கி கொண்டு அவரை

கவனிக்காமல் விட்டுவிட்டார் என்று கூறி இருக்கிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு எவ்வளவு வருமானம் வந்தது வாதி அவரிடம் இருந்து எவ்வளவு வருமானம் வாங்கி கொண்டார் என்பதை நிருபிக்க பிரதிவாதி தரப்பில் எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10. 1ம் பிரதிவாதி 2003 ம் ஆண்டிலே அவதிபட்டுவந்ததாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லி இருக்கிறேன்என்றால் சரிதான். மேற்கண்ட கூற்றை நிருபிக்க நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதும் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் தெரியவில்லை. வாதி பட்டிகை சொத்தில் வசித்து வரவில்லை என்பதை நிருபிக்க எந்த விதமான ஆவணமும தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்து கைவச அனுபவம் என்னிடமோ, அல்லது எனது தாயாரிடமோ இருப்பதை நிருபிக்க எந்த விதமாக ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11. 1ம் பிரதிவாதி விபத்தில் சிக்கி காயமடைந்தார் என்று குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் சரிதான். அதை நிருபிக்க எதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. மேற்படி பட்டிகை சொத்தில் வாதி அத்துமீறி நுழைந்து வசித்து வந்ததை நிருபிக்க எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வாதி 1ம் பிரதிவாதியின் மனைவி என்பதாலும் 1ம் பிரதிவாதியும் வாதியும் கூட்டாக வாழ்ந்து வந்த வீடு என்பதாலும் பட்டிகை சொத்து வாதி திருமணத்திற்கு பின்பு உள்ள வீடு என்பதால் வாதிக்கு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் பிரிவின் கீழ் திருமணமான மனைவி அவர் புகுந்த வீட்டில் வாழ முழுஉரிமை உண்டு என்பதால் வாதி தன்னை அவரது திருமண வீட்டிலிருந்து சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்ற கூடாது என்று இந்த நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால்

சரிதான்.

12. மேற்படி வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய படி இந்த வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதி வழக்குரையில் கேட்டுக்கொண்டுள்ள படி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.